# வணிகக் கல்வி

## தேர்ச்சி மட்டம் 1.2



## தேர்ச்சி மட்டம் 1.2

⇒ **சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் ஆரம்பத்தில் இருந்தே பூகோளச் சந்தையில் குவி மையமாகக் கொண்டு உருவாக்கிய வணிகம்

1) மோட்டார் வாகனம்
2) மின் உபகரணங்கள்
3) ஆடைத் தொழில்
4) கட்டுமானங்கள்
5) சமூக வலைத்தள பக்கங்கள்

(.............)

2. பின்வருவனவற்றுள் ஒரு நவீன வணிகப் போக்கு அல்லாதது எது?

1) பூகோள மயமாதல்
2) இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள்
3) பேரளவு உற்பத்தி
4) பசுமை உற்பத்தி
5) வணிக வெளி மூலங்கள்

(.............)

3. பண்டமாற்று முறையுடன். தோன்றியது எது?

1) பணப் பாவனை
2) வழங்கித் தொழில்
3) உற்பத்தி
4) வியாபாரம்
5) வர்த்தகம்

(.............)

4. பண்டமொன்றின் சிறப்பியல்பு யாது?

1) பிரிக்க முடியாத தன்மை
2) தொட்டுணரமுடியாத தன்மை
3) வேறுபடும் தன்மை
4) அழிந்து போகும் தன்மை
5) தொட்டுணரக்கூடிய தன்மை

(.............)

5. தற்கால வணிகமானது பல்வேறு புதிய போக்குகளுடன் முன்னோக்கிச் செல்கிறது. இவற்றுள் இன்றைய நவீன போக்காக நீர் எதனைக் கருதுவீர்?

1) பிராந்திய மயமாக்கலும் உலகமயமாக்கலும்
2) செல்வாக்குடைய வாடிக்கையாளரும் சனத்தொகையும்
3) உயர்ந்த சந்தைப்போட்டியும் வணிகப் போட்.டியும்
4) இலத்திரனியல் வணிக உற்பத்தியும் சந்தை வெளியும்

6. வியாபாரம் தோற்றுவிக்கப்பட்டது எவ்வாறெனில்,

1) நேர் உற்பத்தி காரணமாக
2) பணப்பாவனை காரணமாக
3) கைத்தொழில் புரட்சி காரணமாக
4) பண்டமாற்று காரணமாக
5) தனியாள் சிறப்புத் தேர்ச்சி காரணமாக

(.............)

7. பின்வருவனவற்றில் வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்கு அல்லாதது?

1) பூகோள மயமாதல்
2) கைத்தொழில்புரட்சி
3) இலத்திரனியல் வணிகம்
4) சூழல் தொடர்பான அவதானம்
5) சமூகப் பெறுப்பு தொடர்பான அக்கறை

(.............)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

8. பின்வருவனவற்றுள் வணிகப் பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பமாக கருத முடியாதது எது?
   1) பண்டமாற்று
   2) நேர் உற்பத்தி
   3) பணப் பாவனை
   4) கைத்தொழில் புரட்சி
   5) தகவல் பொருளாதாரம்
   (.............)

9. பின்வருவனவற்றுள் ஆரம்பத்திலிருந்தே பூகோளச் சந்தையை குவியமாகக் கொண்டு உருவாக்கிய வணிகம் அல்லாதது எது?
   1) மின் அஞ்சல்
   2) முகநூல்
   3) மோட்டார் வாகனங்கள்
   4) வட்ஸ்அப்
   5) டுவிட்டர்
   (.............)

⇒ **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

1. சந்தையானது ............................................ மற்றும் ..........................................முறைகளால் உருவாக்கப்பட முடியும்.
2. ....................................மற்றும் ............................................... ஆகியோரை காணக்கூடியதும் தொடர்புகளால் பேணுவதுமான ஏதேனும் ஒரு வடிவம் சந்தை எனப்படும்
3. உற்பத்தி விநியோகம் 1)............................................................ 2) ............................................................ 3)........................................................ 4)......................................................... போன்றவை அடிப்படை வணிகச் செயற்பாடுகளாகும்.
4. சர்வதேச ரீதியில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருப்பனவாகவும் பரஸ்பரம் இணைந்தனவாகவும் வணிக முயற்சிகள் ஆகும் செயன்முறைக்கு வழங்கும் பெயர் .................................................... ஆகும்.
5. வியாபாரம் தோன்றியது .................................................. என்பதிலிருந்து ஆகும்.
6. மிகை உற்பத்தியை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் ...................................................... என அழைக்கப்படும்.
7. ......................................................... மற்றும் ............................................ என்பவற்றின் சேர்க்கை எனப்படும்
8. தனக்குத் தேவையானவற்றை தானே உற்பத்தி செய்து கொள்ளும் சுய தேவை பூர்த்தி முறையினை ............................................. எனவும் உழைக்கமுடியும்
9. ........................................................ காரணமாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.
10. வணிகப் பரம்பலின் முதலாவது சந்தர்ப்பம் ......................................................... ஆகும்.
11. பண்டமாற்று முறையின் காரணமாக ...................................... என்பன தோற்றம் பெற்றது.
12. ..............................சிறப்புத் தேர்ச்சியின் விளைவொன்றாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.
13. சந்தைக்காக உற்பத்தி செய்வது ...................................... எனப்படும்
14. ஐரோப்பிய நாடுகளின் நாணயம் ............................................. ஆகும்
15. வரவட்டை, கடனட்டை, முற்பணக் கொடுப்பனவு அட்டை, கடன் மாற்றுகை முறை போன்றன ................................................ பணப் பயன்பாட்டுக்கு உதாரணமாகும்
16. வணிகப் பரம்பலின் இரண்டாவது படிமுறை ......................................................... பயன்பாடாகும்

16. வணிகப் பரம்பலின் இரண்டாவது படிமுறை ......................................................... பயன்பாடாகும்

17. ........................................................ வணிகப் பரம்பலின் மூன்றாவது கட்டமாகும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

18. வியாபாரம் மற்றும் துணைச் சேவைகளின் சேர்க்கை ..................................... என அழைக்கப்படும் .

19. வலையமைப்பினூடாக கொள்வனவு, இற்றும், விற்பனை நடவடிக்கைகள் இடம் பெறுவது .............................................. வர்த்தகம் எனப்படும்.

20. .......................................................... வணிகப் பரம்பலின் மூன்றாவது கட்டமாகும்.

- **சுருக்கமான விடை தருக**

1. வியாபாரம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
2. "வியாபாரமும், வர்த்தகமும்" எனும் எண்ணக் கருக்களை விளக்குக.
3. வணிகத்தின் வளர்ச்சி என்பது ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட நிகழ்வு அல்ல. இது மனித நாரீகத்துடன் சமாந்தரமாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு நீண்ட செயன்முறையாகும். வணிக விரிவாக்கத்துடன் தொடர்புபட்டதாக மேற்கூறிய கூற்றுப் பற்றி கருத்துரைக்குக.
4. இன்று வணிகத் துறையில் பல எண்ணிக்கையான புதிய போக்குகளைக் காணமுடியும் அவ்வாறான மூன்று முக்கிய போக்குளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
5. இலங்கையின் பண்டைய பொருளாதார செயன்முறையில் விவசாயம் அடிப்படையானதாக காணப்பட்டபோதிலும் நிகழ் காலத்தில் விவசாயத்திற்கு மேலதிகமாக பல்வேறு துறைகளை நோக்கி நகர்ந்துள்ளதை காண முடிகிறது. தற்போது காணப்படும் இத்தைகைய போக்கிற்கான நான்கு காரணங்களையும் குறிப்பிடுக.
6. வணிகத்தின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய கட்டங்களை எழுதுக
7. பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப்பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறையினை பட்டியல்படுத்துக்.
8. வர்த்தகம் என்பது வியாபாரத்திலும் கூடுதலான ஒன்றாகும். ஆயினும் வியாபாரம் இன்றி வர்த்தகம் இடம்பெற முடியாது" விளக்குக.
9. பண்டமாற்று முறைமையின் வரையறைகள் இரண்டினை விபரிக்குக.
10. வணிகமானது பல்வேறுபட்ட காலகட்டங்களைக் கடந்து மின்னல் வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது" இன்றைய நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் வணிகத் துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக..
11. சிறப்பு தேர்ச்சி என்பதனை வரையறை செய்க
12. பண்டமாற்று முறை தொடக்கம் இன்றுவரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறையினை பட்டியல் படுத்துக.
13. இலத்திரனியன் பணப் பயன்பாடு என்பதை விளக்குக.
14. வர்த்தகத்தின் பிரிவுகளை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
15. இலத்திரனியல் வர்த்தகம் நிகழ் காலத்தில் பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளைத் தருக.
16. வணிகப் பரம்பலின் முக்கியமாக நான்கு சந்தர்ப்பங்களும் எவை?
17. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகளைக் குறிப்படுக.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு - 01



- **கீழே சில விடய ஆய்வுகள் தரப்படுகின்றன.**

1. இல்லத்தரசிகள் தமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை நாளாந்த வீட்டு நுகர்விற்காக பயன்படுத்தல்.
2. சிறிய மாட்டுப் பண்ணையொன்றை நடத்திச் செல்லும் ஒருவர் அதன் மூலம் கிடைக்கும் பாலினை அருகிலிருக்கும் பால் சேகரிக்கும் நிலையத்திற்கு விநியோகித்தல்.
3. இனிப்பு பண்டங்களின் உற்பத்தியில் திறமையுடைய ஒருவர் வைபவங்களுக்கு இனிப்பு பண்டங்களை தயாரித்து வழங்குதல்.
4. பசு மாடு சிலவற்றை வளர்க்கும் கிராமப்புற வீடொன்றில் அவர்களின் பாவனைக்காக நெய்யினை உற்பத்தி செய்தல்.
5. சேனைப் பயிர் செய்கையில் ஈடுபடும் சரவணனின் மனைவி கச்சானை (நிலக்கடலை) அவித்து வீட்டின் முன் பிரதான வீதியோரத்தில் விற்பனை செய்தல்
6. ஆடை வகைகளை தைப்பதில் திறமையுள்ள விமலா தனது பிள்ளைகள், கணவர் ஆகியோருக்குத் தேவையான ஆடைகளைத் தைத்தல்.
7. பூமரங்களை வளர்ப்பதில் ஆர்வமுள்ள மாயா தனது தோட்டத்திலுள்ள மலர்களைக் கொண்டு வைபவங்களுக்கு தேவையான மாலைகளைக் கட்டிக் கொடுத்தல்.

**மேற்குறிப்பிட்ட ஒவ்வொன்றும் நேர் உற்பத்தியா? நேரில் உற்பத்தியா என வேறுபடுத்திக் காட்டுக.**

தொகுப்பு : ?????????????????????????????? , ஆசிரியர் (??????????????) - ?????????????????????????

கணினி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜெயசுலக்ஷன், ஆசிரியர் (உள்துறை வடிவமைப்பு) - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு - 02

பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்காக பரிமாற்றூடகமாக பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இணையத்தின் உதவியுடன் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட பொருட்களை பட்டியல்படுத்துங்கள்.

(படங்களை இணைக்குக)



## செயற்பாடு - 03

பணமானது இன்றுவரையில் வளர்ச்சியடைந்துள்ள முறையினை விளக்குக.

(இதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பான படங்களை இணையத்தள உதவியுடன் பெற்று விளக்குக.)

- பணமாக பொருட்கள் பயன்படுத்தப்படல்
- உலோக நாணயங்கள்
- நாணயம் (இலங்கை மற்றும் வேறு நாடுகளுக்கானது)
- நாணயத் தாள்கள் (இலங்கை மற்றும் வேறு நாடுகளுக்கானது)
- காசோலை
- இலத்திரனியல் பண அட்டைகள்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : ??????????????????????????????? , ஆசிரியர் (???????????????) - ???????????????????????????
கணினி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜெயசுலக்ஷன், ஆசிரியர் (உள்துறை வடிவமைப்பு) - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு - 04

- பின்வரும் நாடுகளின் நாணய அலகுகளை இணையத்தின் உதவியுடன் பெற்றுத் எழுதுக

1. ஐக்கிய இராசசியம்
2. ஐக்கிய அமெரிக்க குடியரசு
3. ஐரோப்பிய நாடுகள்
4. மலேசியா
5. சிங்கப்பூர்
6. பங்களாதேஷ்
7. இந்தோனேசிய
8. ஓமான்
9. நேபாளம்
10. இந்தியா
11. சீனா
12. யப்பான்
13. தாய்வான்
14. மாலைதீவு
15. அவுஸ்திரேலியா

## செயற்பாடு - 05

- எமது அன்றாட வாழ்க்கையில் வணிக நடவடிக்கைகளின் போது இல.த்திரனியல் வணிகம் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றது.

1. வெளிநாட்டிலிருந்து புத்தகமொன்றை கொள்வனவு செய்தல்
2. இலங்கையிலுள்ள வைத்திய நிபுணர் ஒருவரிடமிருந்து வைத்திய ஆலோசனையையும், பரிசோதனையையும் செய்தல்
3. வெளிநாட்டிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்தல்
4. இந்தியாவிலிருந்து பட்டுச் சேலைகளை கொள்வனவு செய்தல்

மேற்கூறிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் இலத்திரனியல் வணிகம் இடம்பெறும் முறைகளை முறையான ஒழுங்கில் குறிப்பிடுக.

## செயற்பாடு - 06

- தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வணிகங்களின் நவீன போக்குகள் பற்றி ஆராய்க.
- இலத்தினியல் வணிகம் காரணமாக சமூகத்திற்கு ஏற்படும் சாதகமான, பாதகமான தாக்கங்கள் பற்றி ஆராய்க.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk